செய்தி வெளியீடு எண்: 186/2017 நாள் : 01.04.2017

**பொதுமக்கள் மின்னணு குடும்ப அட்டைகளை பெற தங்கள் கைபேசிக்கு குறுஞ்செய்தியாக வரும் அடையாள எண்ணை தவறாமல் 7 நாட்களுக்குள்ளாக நியாயவிலை கடைகளில் பதிவு செய்து புதிய மின்னணு குடும்ப அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும்!**

**பொதுமக்கள் தங்கள் கைபேசிக்கு குறுஞ்செய்தி வரும் வரை காத்திருக்கவும்!!**

**வேலூர் மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்!!!.**

வேலூர் கற்பகம் கூட்டுறவு அங்காடி ராஜாகோபால் நிலைய வளாகத்தில் வேலூர் மாவட்டத்தில் பொதுவிநியோக திட்டத்தில் பயன்பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை (SMART CARD) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மின்னணு அட்டைகளை வழங்கி பேசியதாவது.

நியாயவிலை கடைகளின் மூலம் பொதுமக்களுக்கு குறைவான விலையில் உணவு பொருள் வழங்கும் முறை என்பது இரண்டாம் உலகபோரின் போது ஏற்பட்ட உணவு தட்டுப்பாட்டின் காரணமாக நாட்டின் ஒரு சில பகுதிகளில் அரசு பொதுமக்களுக்கு உணவு பொருட்களை வழங்க ஏற்பாடுகளை செய்தது. அதன்படி இந்தியாவிலேயே முதன்முதலாக் மும்பையில் 1939 ஆம்ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டது. பின்னர் இந்தியா சுதந்திரத்திற்கு பிறகு இந்த திட்டத்தை நிறுத்தி விட அரசு முற்பட்டபோது பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று இத்திட்டம் தொடர்ந்து நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய அரசின் முதல் 5 ஆண்டு திட்டத்தில் அரிசி மற்றும் கோதுமைகளை வழங்கலாம் என்று முடிவு செய்து அவ்வாறே நாடு முழுவதும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது கடந்த 2013 ஆம் ஆண்டு உணவு பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் தலா 5 கிலோ அரிசி என நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகள் 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்டு ஏறக்குறைய 11 ஆண்டுகள் பயன்பாட்டில் உள்ளது. மறைந்த தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்த குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக நவீன காலத்திற்கு ஏற்றார் போல மின்னணு குடும்ப அட்டைகளை வழங்க ஆணை பிறப்பித்து அவற்றின் மீது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த சிறப்பான திட்டத்தினை செயல்படுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில் கடந்த 2016 செப்டம்பர் முதல் குடும்ப அட்டைகள் குறித்தும் பொருட்கள் வழங்குவது குறித்தும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு அவைகள் வெற்றிகரமாக நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. மேலும் தற்போது குடும்ப அட்டைகளை மின்னணு குடும்ப அட்டை (SMART CARD) எனும் கையடக்க அட்டையாக மாற்றப்பட்டு நமது வேலூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக வேலூர் வட்டத்தில் 7703ம் ,வாலாஜா வட்டத்தில் 15838ம் அரக்கோணம் வட்டத்தில் 11215ம் மின்னணு அட்டைகளும் இன்று முதல் வழங்கப்படுகிறது மேலும் தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் உள்ள 8,87,933 குடும்ப அட்டைகளுக்கும் படிப்படியாக இரண்டு மாதத்தில் வழங்கப்படும். இந்த மின்னணு குடும்ப அட்டையில் குடும்ப தலைவரின் புகைபடம் அச்சடிக்கப்பட்டிருக்கும். இந்த அட்டை தொலைந்து போனாலும் அரசின் பொது சேவை கணினி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் பெயர் சேர்த்தல் நீக்கல் மேலும் குடும்ப தலைவரின் புகைப்படத்தை மாற்றுதல் போன்றவைகளை அட்டைதாரர்களே இணைய தளத்தின் வழியே தற்போது செய்து கொள்ள எளிமையாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய மின்னணு குடும்ப அட்டைகள் பொதுமக்கள் பொருட்கள் வாங்கும் அந்தந்த நியாவிலை கடைகளிலே வழங்கப்படும்.

புதிய மின்னணு குடும்ப அட்டை அச்சடிக்கப்பட்டு விநியோகிக்க தயார் நிலையில் உள்ளபோது குடும்ப அட்டைதாரின் கைபேசிக்கு குறுஞ்செய்தி வழியாக அடையாள எண் அனுப்பி வைக்கப்படும். இந்த அடையாள எண்ணினை வரபெற்ற 7 நாட்களுக்குள் நியாய விலை கடை விற்பனையாளரிடம் காண்பித்து புதிய குடும்ப அட்டையை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம். புதிய மின்னணு குடும்ப அட்டை கிடைக்க பெறாதவர்கள் பழைய குடும்ப அட்டையை கொண்டே இன்னும் இரண்டு மாதங்களுக்கு உணவு பொருட்களை நியாயவிலை கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த விழாவில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ப.கார்த்திகேயன், மண்டல கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைபதிவாளர் திரு.திருகுணஐயப்பத்துரை, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.அஜய்சீனிவாசன், வேலூர் மாவட்ட மொத்த கூட்டுறவு பண்டக சாலை தலைவர் திரு.டி.ராஜா, துணை தலைவர் திரு.மணி, மாவட்ட பதிவாளர் பொது விநியோக திட்டம் திரு.முனிராஜ், வேலூர் வட்டாட்சியர் திரு.பழனி, தனிவட்டாட்சியர் குடிமை பொருள் திரு.இளஞ்செழியன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

இந்த விழாவில் மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.வேணுசேகரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்,

இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட மொத்த கூட்டுறவு பண்டக சாலை மேலாண்மை இயக்குநர் திருமதி.காமாட்சி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

வெளியீடு:

7.4.2017

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,வேலூர்-9.